TAMIL NADU
GOVERNMENT GAZETTE
PUBLISHED BY AUTHORITY

No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008
Karhigai 11, Thiruvalluvar Aandu-2039

# Part VI --- Section 2

(Supplement)

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

---

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(அறிக்கை எண். த.மி.ஒ.ஆ / DC / 8–1 , 22. 11. 2005 நாளிட்டது)

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளை செயற்படுத்துவது குறித்து ஒருசில இடர்ப்பாடுகளையும் தவறான கருத்துக்களையும் நீக்குவதற்காக, மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகைசெய்கிற திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வறையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது , அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 46ஆம் பிரிவுடன் சேர்த்துப்படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற

அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/DC/8/1இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது, மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது **: –**

**“ 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம் ) விதித்தொகுப்பு ”**

**1.** **<u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்</u>** : –

(a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், **” 2005** ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு” என்று வழங்கப்பெறும்.

(b) இந்த ஒழுங்குமுறைவிதிகள், அவை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2.** **27ஆம் ஒழுங்குமுறைவிதியின் கீழுள்ள, (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்கு (Sub Regulation) கீழே, பின்வரும் வரம்புரை சேர்க்கப்படுகிறது :**

---

‘‘ஆனால், உரிமம்தாரர், எந்த நுகர்வோர் பெயரிலுள்ள பிற மின்னிணைப்பு எதனையும் பொறுத்து உரிமம்தாரருக்கு நிலுவைகளை செலுத்தத் தவறுகை செய்கிறாரோ, அந்த நுகர்வோருக்கு மின்சாரம் வழங்குவதற்கு மறுத்தல் வேண்டும்’’.

---

**“29**ஆம் ஒழுங்குமுறைவிதியின் கீழுள்ள, **(12)** ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் முதல் பத்தி பின்வருமாறு மாற்றப்படுகிறது : –

---

(12) சாய்தளம் /அடித்தளம் நீங்கலாக, மொத்தக்கட்டிடப்பரப்பு 900 சதுர மீட்டருக்கு மேலாகவுள்ள அல்லது அந்தக் கட்டிடத்திலுள்ள தாழ் மின்னழுத்த மின்னிணைப்புகள் 150 கிலோ வாட் (KW)க்கு மேற்படுகிற தாழ் அழுத்த (LT) மின்னிணைப்பு கோருகிற கட்டிடம் / வளாகம் எதற்காகவும், –

(i) (a) 6 மீட்டர்கள் x 4 மீட்டர்களுக்கு அளவு கொண்ட செங்குத்தான இடைவெளியுள்ள 2.75 சதுர மீட்டருடன் பூட்டக்கூடிய வசதியுடைய வளிப்போக்கி மின் விசிறிகள் மற்றும் போதிய அளவுள்ள மின் வடக்குழல் உள்ள கூரையில் வலிவூட்டிய கற்காரை, போடப்பட்ட மின்சார அறை நுகர்வோரின் பலமாடிக் கட்டிடத்தின் பிரதான நுழைவாயில் அருகில் தரைத்தளத்தில் மின் பகிர்வு மின் மாற்றியையும், அதனுடனான இணைப்பமைப்பையும் வைப்பதற்கு வகை செய்தல் வேண்டும் , அல்லது

(b) திறந்தவெளியில் 10 மீட்டர் x 4 மீட்டர் அல்லது 5 மீட்டர் x 5 மீட்டர் இடமுள்ள நுகர்வோரின் வளாகத்திற்குள், பிரதான நுழைவாயிலில் கட்டமைப்பு மின் பகிர்மான மின்மாற்றியையும் அதனுடைய இணைப்பமைப்பையும் வைப்பதற்கு வகை செய்தல் வேண்டும், மற்றும்

(ii) மொத்தத் தேவை 5 MVAக்கு மேற்படுகிற வீடுகள் / வணிக வளாகங்களிலுள்ள இடங்களில் துணை மின் நிலையம் / இணைப்பு மின் நிலையம் நிறுவதற்கு ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட வரன்முறைகளின்படி இடம் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

---

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி )

இரா. பாலசுப்பிரமணியன்

செயலாளர்